புயல் மழை வெள்ளத்தால் பாதித்த பகுதிகளில்

# வீடுகளை சுத்தம் செய்ய ஆட்கள் பற்றாக்குறை

■ இரண்டரை மணி நேர தூய்மை பணிக்கு ₹4,500 முதல் ₹10,000 வரை வசூலிக்கும் நிறுவனங்கள்

**சென்னை, டிச.9:** மிக்ஜாம் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தண்ணீர் வடிந்து 2 நாட்கள் ஆன நிலையில் வீடுகளில் உள்ள கழிவுகளை சுத்தம் செய்ய ஆட்கள் கிடைக்காததால் ஆயிரக்கணக்கான முதியவர்கள், மக்கள் நிவாரண முகாம் மற்றும் விடுதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். வீடுகளை சுத்தம் செய்ய ஆன்லைன் நிறுவனங்கள் இரண்டரை மணி நேரத்திற்கு ₹4,500 முதல் ₹10 ஆயிரம் வரை பணம் வசூலித்து வருகின்றனர்.

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியது. பல அடுக்குமாடி குடியிருப்புகளின் தரைத்தளம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் லட்சக்கணக்கான மக்கள் நிவாரண முகாம்கள், உறவினர் வீடுகள், விடுதிகளில் தங்கியுள்ளனர். வெள்ள நீர் பாதித்த பகுதிகளில் தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் எடுத்த துரித நடவடிக்கையால் 85 சதவீத இடங்களில் வெள்ள நீர் முழுமையாக வெளியேற்றப்பட்டுள்ளது. 15 சதவீதம் பகுதிகள் மிகவும் தாழ்வாக இருப்பதால் அப்பகுதிகளில் மட்டும் தற்போது ராட்சத இயந்திரங்கள் உதவியுடன் வெள்ள நீர் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, பெரும்பாக்கம், பெருங்குடி, நீலாங்கரை, மேற்கு தாம்பரம், முடிச்சூர், ஊரப்பாக்கம், வண்டலூர், ஆவடி, அம்பத்தூர், மாதவரம் மற்றும் வடசென்னையில் பெரும்பாலான இடங்களில் தாழ்வான பகுதிகளில் மழைநீருடன் கழிவு நீர் கலந்துள்ளது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு கழிவுநீர், சேறு, சகதி புகுந்த வீடுகளில் தண்ணீர் வடிந்தும், மக்கள் தங்களது வீடுகளுக்குள் குடியேற முடியாமல் தவித்து வருகின்றனர். சில இடங்களில் வீட்டு உரிமையாளர்களே சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் தனியாக வசிக்கும் முதியவர்கள், குழந்தைகளுடன் வசிக்கும் தம்பதிகள் பலர் தங்கள் வீடுகளை சுத்தம் செய்ய துப்புரவு பணியாளர்கள் உதவியை நாடியுள்ளனர்.

ஆனால், பெரும்பாலான பகுதிகளில் ஆட்கள் கிடைப்பதில்லை. இதனால் பலர் வீடுகளை சுத்தம் செய்ய ஆன்லைன் நிறுவனங்களில் முன்பதிவு செய்கின்றனர். பதிவு செய்த நேரத்தில் இருந்து 12 மணி முதல் 24 மணி நேரம் கழித்துதான் சுத்தம் செய்ய வருகின்றனர். அதுவும் ஒரு வீட்டிற்கு இரண்டரை மணி நேரம் மட்டும்தான் நேரம் ஒதுக்குகின்றனர். 2 படுக்கையறை வீட்டுக்கு கட்டணமாக ₹4,500ம், 3 படுக்கை அறைகள் மற்றும் அதற்கு மேல் உள்ள வீட்டிற்கு ₹10 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கின்றனர். இது வெறும் வீட்டில் உள்ள தரைகள், கழிவறைகள் மட்டும் சுத்தம் செய்ய கட்டணம் தான். மழையால் பாதித்த பொருட்கள் சுத்தம் செய்ய கிடையாது. அதற்கு தனி கட்டணம் என பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து பிரபல ஆன்லைன் துப்புரவு நிறுவன அதிகாரி ஒருவர் கூறியதாவது:

புயல் மழையால் வீடுகளில் தண்ணீர் புகுந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எங்கள் நிறுவனத்திற்கு மட்டும் கடந்த 2 நாட்களில் ஆன்லைன் மூலம் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்களது வீடுகளை சுத்தம் செய்ய பதிவு செய்துள்ளனர். ஒரே நேரத்தில் இவ்வளவு பேர் முன்பதிவு செய்துள்ளது இதுவே முதன்முறை. இதனால் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து ஆட்களை வரவழைத்துள்ளோம். சம்பந்தப்பட்ட வீட்டிற்கு எங்கள் ஆட்கள் சென்றதும், வீடு முழுவதும் செல்போனில் புகைப்படம் எடுத்து அனுப்புவார்கள். அதன்படி அந்த வீட்டிற்கு எவ்வளவு நேரத்தில் சுத்தம் செய்ய முடியும் என்று நாங்கள் கணக்கிட்டு அவர்களிடம் கூறுவோம். அதன்படி அவர்கள், அந்த வீட்டை குறைந்தது இரண்டரை மணி நேரத்திற்குள் முடித்துவிட்டு, எங்களிடம் முன்பதிவு செய்துள்ள மற்றொரு வீட்டுக்கு சென்று விடுவார்கள். நிறைய அழைப்புகள் வருவதால் சுத்தம் செய்ய குறுகிய நேரம்தான் ஒதுக்க முடிகிறது. தற்போது உள்ள சூழ்நிலையில் முழுமையாக ஒரு வீட்டை சுத்தம் செய்ய முடியவில்லை" என்றார்.

## பேக்கேஜிற்கு ஏற்ப சேவை

தூய்மைப்பணியில் ஈடுபடும் ஆன்லைன் நிறுவன அதிகாரி ஒருவர் கூறுகையில், "வீட்டை சுத்தம் செய்ய, எங்கள் நிறுவனம் பலவிதமான பேக்கேஜ் உள்ளது. ஆன்லைனில் வீட்டின் உரிமையாளர் எந்த பேக்கேஜ் பதிவு செய்கிறாரோ அந்த பேக்கேஜ் மட்டும் தான், எங்கள் ஊழியர்கள் செய்வார்கள். தூய்மை பணிக்கு தேவையான அனைத்தும் எங்கள் பொருட்களும் நாங்களே வைத்துள்ளாம். வீட்டின் உரிமையாளரிடம் நாங்கள், துய்மை பணிக்கு தேவையான தண்ணீர் தவிர, வேறு எதையும் கேட்பது இல்லை. வேறு வேலைகள் செய்ய மாட்டார்கள். ஆனால் கடந்த 2 நாட்களாக பொதுமக்கள் வீடுகளில் முதலில் குடியேறும் வகையில் வீட்டின் தரைகள், கழிவறைகள் மட்டும் சுத்தம் செய்யும் பேக்கேஜ் மட்டும் தான் நாங்கள் எடுத்து வருகிறோம். மற்ற பேக்கேஜ்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம்" என்றார்.

## மோட்டார் பம்புகளுக்கு எகிறியது வாடகை

வீடுகளில் தேங்கி நிற்கும் மழைநீரை அகற்ற வாடகை மோட்டார் பம்புகள் கிடைக்காமல் பலர் அவதிக்குள்ளாகியுள்ளனர். மோட்டார் பம்புகளுக்கு கடும் டிமாண்ட் ஏற்பட்டுள்ளதால் அதன் உரிமையாளர்கள் வாடகை தொகையை தாறுமாறாக உயர்த்தி வருகின்றனர். ஒரு வீட்டில் மழைநீரை அகற்றிக் கொண்டிக்கும் போதே இன்னொரு ஆர்டர் வந்து, அதை விட கூடுதலான தொகைக்கு கேட்டால் உடனடியாக ஓடிக் கொண்டிருக்கும் ஆர்டரை கேன்சல் செய்து விட்டு அதிக வாடகை தரக்கூடியவர்களுக்கு வீடுகளுக்கு எடுத்து சென்று விடுகின்றனர். ஒரு மணி நேரத்துக்கு ₹3000 முதல் ₹5000 வரை கேட்கின்றனர். பலர் இதைவிட அதிகமாக கேட்கின்றனர் என பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர்.

---

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் படர்ந்துள்ள

# ஆகாய தாமரை செடிகளை அகற்றி மழைநீர் வடிய நடவடிக்கை

▶ பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் ஆகாய தாமரைகளை பொக்லைன் மூலம் அகற்றி, மழைநீரை விரைவாக வெளியேற்றும் பணியை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார். அருகில், பொதுப்பணித் துறை செயலாளர் சந்தரமோகன் உள்ளிட்ட அதிகாரிகள்.

## அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு

**சென்னை, டிச. 9:** பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் படர்ந்துள்ள ஆகாய தாமரை செடிகளை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் அகற்றி மழைநீர் விரைவாகவடிய நடவடிக்கை மேற்கொண்டார்.

சென்னையில், வேளச்சேரி, அம்பேத்கர் நகர், மடிப்பாக்கம் பாலாஜிநகர், பள்ளிக்கரணை, சாய்பாலாஜி நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5500 அரிசி மூட்டைகள், 11600 பால் பவுடர் பாக்கெட்டுகள், 14000 வாட்டர் பாட்டில்கள், 70000 பிஸ்கெட் பாக்கெட்டுகள், 12000 பிரட் பாக்கெட்டுகள், 17000 ஸ்வீட் பிரட் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பு ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மேலும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் படர்ந்துள்ள ஆகாய தாமரை செடிகளை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு அதனை ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் அகற்றி மழைநீர் விரைவாக வடிய நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்நிகழ்வின் போது பொதுப்பணித்துறை செயலாளர் சந்திரமோகன், நெடுஞ்சாலை துறை தலைமை பொறியாளர் சந்திரசேகர், பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி மற்றும் நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர்களும், அலுவலர்களும் உடனிருந்து நிவாரணப் பொருட்களை வழங்கினர்.

**ஐஆர்இஎல் (இந்தியா) லிமிடெட்**
(ஓர் இந்திய அரசு நிறுவனம்–அணுசக்தித் துறை)
பிரபாதேவி, மும்பை–400 028
CIN: U15100MH1950GOI008187
Unleashing Values

விளம்பர எண். CO/HRM/23/2023

ஐஆர்இஎல் (இந்தியா) லிமிடெட், ஒரு மினிரத்னா–I CPSE, பின்வரும் பதவிகளுக்காக அனுபவமுள்ள நிதித்துறை மற்றும் தொழில்நுட்பம் (மெட்டலர்ஜி/மெட்டீரியல் சயின்ஸ்) தொழில்முறையாளர்களிடமிருந்து ஆன்லைன் விண்ணப்பங்களை வரவேற்கிறது. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 03.01.2024.

| பதவியின் பெயர் | தரநிலை | சம்பள விகிதம் (ரூபாயில்) | பதவி எண்ணிக்கை |
|---|---|---|---|
| தலைமை மேலாளர் (நிதி) | இ–5 | 80,000–2,20,000 | 1 |
| முதுநிலை மேலாளர் (நிதி) | இ–4 | 70,000–2,00,000 | |
| துணை மேலாளர் (நிதி) | இ–2 | 50,000–1,60,000 | 1 |
| உதவி மேலாளர் (நிதி) | இ–1 | 40,000–1,40,000 | |
| துணை மேலாளர் (தொழில்நுட்பம்) | இ–2 | 50,000–1,60,000 | 3 |
| உதவி மேலாளர் (தொழில்நுட்பம்) | இ–1 | 40,000–1,40,000 | |
| தொழில்நுட்ப மேற்பார்வையாளர் | இ–2 | 26,500–72,000 | 4 |
| இளநிலை தொழில்நுட்ப மேற்பார்வையாளர் | இ–1 | 25,000–68,000 | |

தகுதி மற்றும் விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள், விவரங்களுக்காகவும் மற்றும் விண்ணப்பிப்பதற்கும் ஐஆர்இஎல் இணையதளம் www.irel.co.in இல் career பிரிவைப் பார்க்கவும்.

CBC 48129/12/0043/2324

# செங்கல்பட்டில் திடீர் நில அதிர்வு

## பொதுமக்கள் பீதி

▶ வாணியம்பாடியில் ஏற்பட்ட நில அதிர்வால் வீட்டின் சுவரில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

**சென்னை, டிச. 9:** செங்கல்பட்டை மையமாக கொண்டு நேற்று காலை 3.2 ரிக்டர் அளவில் திடீர் நிலஅதிர்வு ஏற்பட்டது. இது, பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தியது.

செங்கல்பட்டு பகுதியை மையமாக கொண்டு மகேந்திரா வேர்ல்டு சிட்டி மற்றும் அதை சுற்றியுள்ள அஞ்சூர், புளிப்பாக்கம், பரனூர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று காலை லேசான நிலஅதிர்வு உணரப்பட்டது. இது, ரிக்டர் அளவில் 3.2 ஆக பதிவாகியுள்ளது. சரியாக காலை 7.39 மணியளவில் பூமிக்கு அடியில் 10 கி.மீ. ஆழத்தில் இந்த நிலஅதிர்வு ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் சுமார் 90 கி.மீ. சுற்றளவு வரை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கலெக்டர் ராகுல்நாத் கூறுகையில், "இந்த நில அதிர்வால் எந்த பாதிப்பு ஏற்படவில்லை. இதனால் பொதுமக்கள் பயப்பட தேவையில்லை" என்றார்.

## வேலூர், திருப்பத்தூரிலும்...

வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களில் நேற்று திடீரென ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வீடுகளில் விரிசல் ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதியடைந்து சாலைகளில் தஞ்சமடைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் உள்ள பல்வேறு கிராமங்களில் நேற்று காலை சுமார் 7.40 மணி அளவில் திடீர் நிலஅதிர்வு உணரப்பட்டது. இதே போல் வாணியம்பாடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் காலை 7.35 மணியளவிலும், 7.42 மணியளவிலும் என 2 முறை நில அதிர்வு உணரப்பட்டது. வேலூர் மாவட்டத்தில் பேரணாம்பட்டு அடுத்த பல்லலகுப்பம் உள்ளிட்ட பகுதிகளிலும் நில அதிர்வு காணப்பட்டது.

---

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎப்எஸ் பதவிக்கான மெயின் தேர்வு ரிசல்ட்

# இந்தியா முழுவதும் 2844 பேர் தேர்ச்சி

தமிழ்நாட்டில் 132 பேர் தேர்ச்சி பெற்று சாதனை

**சென்னை, டிச.9:** மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட பதவிகளுக்கான மெயின் தேர்வு ரிசல்ட் நேற்று வெளியிடப்பட்டது. இதில் இந்தியா முழுவதும் 2844 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தமிழகத்தில் மட்டும் 132 பேர் தேர்ச்சி பெற்று அசத்தியுள்ளனர்.

இந்தாண்டுக்கான சிவில் சர்வீஸ் பணியில் அடங்கிய 1105 பதவிகளை நிரப்புவதற்கான அறிவிப்பு கடந்த பிப்ரவரி 1ம் தேதி வெளியிடப்பட்டது. முதல் நிலைதேர்ச்சி பெற்றோருக்கான மெயின் தேர்வு கடந்த செப்டம்பர் மாதம் 15, 16, 17, 23 மற்றும் 24ம் தேதி என 5 நாட்கள் நடந்தது. இந்த நிலையில் மெயின் தேர்வுக்கான ரிசல்ட்டை யுபிஎஸ்சி தனது இணையதளமான www.upsc.gov.inல் நேற்று மாலை வெளியிட்டது.

இதுகுறித்து சங்கர் ஐஏஎஸ் அகாடமி நிர்வாக இயக்குனர் டாக்டர் எஸ்.டி.வைஷ்ணவி கூறியதாவது:

சிவில் சர்வீஸ் மெயின் தேர்வில் இந்தியா முழுவதும் இருந்து 2,844 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து 132 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 92 மாணவர்கள் சங்கர் ஐஏஎஸ் அகாடமியில் பயின்றவர்கள். ஒட்டுமொத்தமாக சங்கர் ஐஏஎஸ் அகாடமியில் (சென்னை, பெங்களூர், திருவனந்தபுரம் ) 504 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களுக்கான நேர்முக தேர்வு டெல்லியில் உள்ள யுபிஎஸ்சி அலுவலகத்தில் நடைபெறும். நேர்முக தேர்வு தேதியை யுபிஎஸ்சி பின்னர் அறிவிக்கும். மெயின் தேர்வில் தேர்ச்சி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நேர்முக தேர்வு பயிற்சி சங்கர் ஐஏஎஸ் அகாடமியில் இலவசமாக அளிக்கப்படுகிறது. இதில் பங்குபெற ஆர்வம் உள்ள மாணவர்கள் interview@shankarias.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

நேர்முகதேர்வு முடிந்த பின்னர் நேர்முக தேர்வு, மெயின் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் பணி ஒதுக்கப்படும். அதன் பின்னர் டேராடூனில் உள்ள இந்திரா காந்தி தேசிய வன பயிற்சி மையத்தில் சுமார் ஒன்றரை ஆண்டுகள் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். அதை தொடர்ந்து அவர்கள் பணியில் சேர்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**GOVERNMENT OF PUDUCHERRY**
**PUBLIC WORKS DEPARTMENT**
**IRRIGATION DIVISION**

No.3776/PW/EEI/ID/JE(P)-33/2023-2024 Puducherry, the 08.12.2023

**PRESS NOTICE FOR e-Tender**

The Executive Engineer, Irrigation Division, Public Works Department, Puducherry invites on behalf of the President of India, online item rate Bids for the following Works:-

**01). Tender No.58/PW/IRRN/2023-2024. Name of Work: Construction of protection wall to the left bank and right bank on the Upstream and Downstream of River Pennaiyar at Kommanthanmedu Village, Bahour Commune, Puducherry. Estimate Cost: Rs.12,97,59,489/- (inclusive of 18% GST). Earnest Money: Rs.22,97,595/-. Period of Completion: Nine (09) Months (Including Monsoon Period).**

**02). Tender No.59/PW/IRRN/2023-2024. Name of Work: Construction of Single Lane Bridge across Bahour Surplus weir and formation of Tank bund road around Bahour Tank in Bahour Revenue Village, Bahour Commune, Puducherry. Estimate Cost: Rs.7,52,99,518/- (inclusive of 18% GST). Earnest Money: Rs.15,05,990/-. Period of Completion: Twelve (12) Months (Including Monsoon Period).**

**Last time & Date of submission of Tender: On or before 02.01.2024 at 04.00 P.M.**

The bid forms and other details can be obtained from the website. **https://pudutenders.gov.in**

No.505/DIP/AD(Press)/2023-24 **EXECUTIVE ENGINEER**

**Government of India**
**Department of Atomic Energy**
**Directorate of Purchase & Stores**
**Vikram Sarabhai Bhavan, '0' floor, Anushaktinagar, Mumbai, Maharashtra – 400 094.**

**ABRIDGED VERSION OF ADVERTISEMENT NO.: 2/DPS/2023**

Online applications are invited for the following Group 'C' posts from eligible candidates for filling up the vacancies in DPS, Mumbai and other Regional Units of DPS all over India :

| Name of the post | SC | ST | OBC* | EWS | UR | TOTAL |
|---|---|---|---|---|---|---|
| Junior Purchase Assistant / Junior Storekeeper Group 'C', Non-Gazetted | 6 | 6 | 20 | 5 | 25 | 62 |

* Includes 2 Backlog vacancies in OBC category.
(For complete details and to apply online please visit our website **https://dpsdae.formflix.in** OR **www.dps.gov.in**. Online application only will be accepted.) The link will be available from **10/12/2023 (00.00 hours) to 31/12/2023(23.59 hours).**

**Administrative Officer-III**

**ICICI Home Finance**
**கார்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை–400059, இந்தியா
**கிளை அலுவலகம்:** 2ஆவது தளம், AB–106, பழைய எண்: 134, 4ஆவது நிழற்சாலை, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–600040
[விதி 8(6) விதிமுறையை காண்க]
அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **கையக சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண். | தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள் | நிலுவைத் தொகை | நிர்ணய விலை | சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | ஏலம் நாள் & நேரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்வைப்புத் தொகை | | |
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1. | சுந்தர் M (கடன்தாரர்) S பவானி (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண் LHANC00001318173 | சர்வே எண்.199/11, 198/15, 198/10, பட்டா எண்.4922, பட்டாவின் படி சர்வே எண். 198/15A2&199/11B இல் பெருமாள்பட்டு கிராமம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மனை எண்.147 இன் மேற்குப் பகுதி ஸ்ரீ வெங்கடேஸ்வரருடைய நிலம் உள்ள சொத்து. | ரூ.33,19,737/– டிசம்பர் 02, 2023 | Rs. 22,00,000/-<br>Rs. 2,20,000/- | டிசம்பர் 18, 2023 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி | டிசம்பர் 27, 2023 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி |

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை குளோபல் டெக் இணையதளத்தில் (URL இணைப்பு– https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு அறிவிப்பின் மூலம் **டிசம்பர் 26, 2023 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், AB–106, பழைய எண்: 134, 4ஆவது நிழற்சாலை, சாந்தி காலனி, அண்ணாநகர், சென்னை–600040** இடத்தில் **டிசம்பர் 26, 2023 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) தங்கள் ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்க ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்டப் பிரதியை **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், AB–106, பழைய எண்: 134, 4ஆவது நிழற்சாலை, சாந்தி காலனி, அண்ணாநகர், சென்னை–600040** என்ற இடத்தில் **டிசம்பர் 26, 2023 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **திருவள்ளூரில்** மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd– Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகத்தீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடை 9920807300** இல் அல்லது எங்கள் விற்பனை & சந்தைப்படுத்தும் கூட்டுதாரர் **நெக்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** உடன் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டுக் காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைக் கொண்டுள்ளார். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள்: டிசம்பர் 09, 2023
இடம்: திருவள்ளூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

சென்னை, புறநகரில் அடுக்குமாடி குடியிருப்பு பதிவில்

# 3 அடுக்கு வழிகாட்டி மதிப்பு நிர்ணயம்

■ அரசு அறிவிப்பு
■ வீடுகள் விலை உயர வாய்ப்பு

**சென்னை, டிச.9:** சென்னை, புறநகரில் அடுக்குமாடி குடியிருப்பு பதிவின் போது ஒரு பகுதிக்கு ஒரே மாதிரியான வழிகாட்டி மதிப்பும், வீடுகளின் தரத்திற்கு ஏற்ப 3 அடுக்காக மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறையால் வீடுகள் விலை உயர வாய்ப்புள்ளதாக கட்டுமானத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சென்னை நகர் மற்றும் புறநகரில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ஒரே வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது . இந்த புதிய மதிப்பு பேசிக், பிரீமியம் மற்றும் அல்ட்ரா பிரீமியம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. உதரணமாக மயிலாப்பூரில் உட்புற சாலைகளுக்கு ₹9000 என்றும் ராதாகிருஷ்ணன் சாலைக்கு அருகில் இருக்கும் பகுதிகளுக்கு ₹13000 என்றும் வழிகாட்டு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது உள்ள புதிய அறிவிப்பின்படி, மயிலாப்பூரில் பேசிக், பிரீமியம் மற்றும் அல்ட்ரா பிரீமியம் வீடுகளுக்கு ஒரு சதுரடிக்கு ₹16,000, ₹18,000 மற்றும் ₹22,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லாவரம் பகுதியில் இந்த மூன்று வகை அடுக்குமாடி குடியிருப்புகளுக்குச் சதுர அடிக்கு முறையே ₹6500, ₹8200 மற்றும் ₹10500 ஆகவும், தாம்பரம் பகுதியில் ₹5,500, ₹6,000 மற்றும் ₹6,500 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து பதிவுத்துறை அதிகாரிகள் கூறியதாவது: 2012ம் ஆண்டுக்கு பின் வழிகாட்டி மதிப்புகளில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இந்த புதிய மதிப்பும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மட்டுமே பொருந்தும், தனி வீடுகள், மனைகளுக்கு பொருந்தாது. இதில் பேசிக் என்பது சாதாரணமான அடுக்குமாடி குடியிருப்புகள், பிரீமியம் வகை வீடுகள் என்பது நீச்சல் குளம் மற்றும் கிளப்ஹவுஸுடன் இருக்கும் வீடுகளாகும், மேலும், அல்ட்ரா பிரீமியம் என்பது அதை காட்டிலும் கூடுதல் வசதிகளைக் கொண்ட வீடுகளாகும் என்று தெரிவித்தனர்.

இதுகுறித்து கட்டுமானத்துறையினர் கூறியதாவது: ஒவ்வொரு தெருவிற்கும் விற்பனை விலை வேறு வேறாகவே இருக்கும் போது ஒரே வழிகாட்டு மதிப்பு சரியாக இருக்காது. கோயம்பேடு, அம்பத்தூர் மற்றும் முகப்பேர் உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு சந்தை மதிப்பை விட அதிகமாக இருக்கிறது. இது புதிதாக அடுக்குமாடி குடியிருப்புகள் வாங்குவது குறையும். இது சென்னையின் வளர்ச்சியையும் கடுமையாகப் பாதிக்கும். எனவே, அரசு இந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டும். இது குறித்து நாங்கள் தமிழ்நாடு அரசிடம் முறையிட உள்ளோம் என்றனர்.

**திண்டுக்கல் மாவட்டம் - மதுரை மண்டலம் - ஒட்டன்சத்திரம் நகராட்சி**
காந்திமார்க்கெட் வளாகத்தில் உள்ள கடைகள் மற்றும் இதர இனங்களுக்கான முன் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு
ந.க.எண்.1787/2023/இ1 (நகர்மன்ற தீர்மான எண்.330, நாள்.30.10.2023 அனுமதிக்கப்பட்டது) நாள்.01.12.2023

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ஆம் நாள் வெள்ளிக் கிழமை முன் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நேரம் (ஏற்கனவே வெளியிடப்பட்டது)

[illegible]

அட்டவணை -1 Zone -A- இல் உள்ள ATM அறை மற்றும் அட்டவணை -2 Zone -D- இல் உள்ள ATM அறை ஆகியவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் மட்டுமே முன் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும்.
செ.ம.தொ.இ./6546/ஒப்பந்தப்புள்ளி/2023

(ஒம்) திரு.சு.கணேஷ், ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

TASMAC
**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்**
மாவட்ட மேலாளர் அலுவலகம், சென்னை (தெற்கு)
பி4, அம்பத்தூர் தொழிற்பேட்டை வளாகம், அம்பத்தூர், சென்னை - 600 058.

(Tender ID: 2023_TASMA_376737_1) **அறிவிப்பு**

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் சென்னை **(தெற்கு) மாவட்டம்** மதுபான சில்லரை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலிபாட்டில்கள் சேகரம் செய்து கொள்ள பெறப்பட்ட இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு திறக்கப்படும்.

இவ்வினத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் | | |
|---|---|---|---|---|
| | | இடம் | நாள் | நேரம் |
| 1. | தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை | 11.12.2023 (திங்கட்கிழமை) | காலை 11.00 |
| 2. | விலைப்புள்ளி (Financial Bid) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை | 13.12.2023 (புதன்கிழமை) | காலை 10.00 |

வெ.ஆ.எண்.019/2023/செ.ம.தொ.அ/சென்னை /நாள் : 08.12.2023

மாவட்ட மேலாளர்,
சென்னை (தெற்கு) மாவட்டம்.

TASMAC
**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்**
மாவட்ட மேலாளர் அலுவலகம், காஞ்சிபுரம் (தெற்கு)
எண். 14-18, சிட்கோ தொழிற்பேட்டை, ஒரிக்கை, செவிலிமேடு, காஞ்சிபுரம் - 631 502

(Tender ID: 2023_TASMA_376729_1) **அறிவிப்பு**

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் காஞ்சிபுரம் **(தெற்கு) மாவட்டம்** மதுபான சில்லரை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலிபாட்டில்கள் சேகரம் செய்து கொள்ள பெறப்பட்ட இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு திறக்கப்படும்.

இவ்வினத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் | | |
|---|---|---|---|---|
| | | இடம் | நாள் | நேரம் |
| 1. | தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் | 11.12.2023 (திங்கட்கிழமை) | காலை 11.00 |
| 2. | விலைப்புள்ளி (Financial Bid) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் | 12.12.2023 (செவ்வாய்கிழமை) | மாலை 04.00 |

வெ.ஆ.எண்.048/2023/செ.ம.தொ.அ/காஞ்சிபுரம்/நாள் : 08.12.2023

மாவட்ட மேலாளர்,
காஞ்சிபுரம் (தெற்கு) மாவட்டம்.